உ

தேவிசகாயம்.

காஞ்சீபுரம்

# காமாட்சியம்மன்

## ஆசிரிய விருத்தம்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதருஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதருஸ் என். சி.

1914.

# விளம்பரம்.

## அற்புத பூலோகரம்பை கதை.

இதனால் சகலமான கனவான்களுக்கும் தெரிவிப்பதுவாகிறதெனில். இதுவரையிலும் வெளிவந்திருக்கும் அராபிக்கதை, பாரீஸ்கதை, குலோபகாவலிகதை நான்குபக்கிரிகள்கதை இன்னும் சில சக்கிரவர்த்திகள் கதை முதலானதும் அவரவர்கள் வாசித்தும் பிறரால் சொலக்கேட்டும் இருப்பீர்கள் ஆகையால் ஷை கதைகளைப்போன்ற ஆயிரம்கதைகளை ஒன்றாய்த்திரட்டி உருக்கிவார்த்ததைப்போல் இப்போது ஏற்படுத்தியிருக்கும் (அற்புத பூலோகரம்பைகதை என்னும் தலைப்புபெயர்கொண்ட ஷை கதையானது மானிடமென்னும் நமது அருமையான பிறவிக்கு கற்பகத்தருவைப்போல் கிடைத்திருக்கிறதென்றறிக இக்கதையை தாங்களே படித்தாவது பிறரால் சொல்லவாவது கேட்பீர்களாகில் இரும்பைக் காந்தமிழுக்கும் பாவனைபோல் ஐம்புலன்களையும் தன்வசத்தில் கிரகித்துக்கொள்ளுவதுமன்றி ஆனந்தபரவசமாய் அவரவர் மனதை உருகச்செய்யுமென்பதின்னும் மேலும் இதில் அடங்கிய சாராம்சங்களை விவரிக்குமிடத்து மகா அற்புதமாயிருக்கும் அதாவது.

ஐயாவே! இந்தக்கதையில் ஆங்காங்கு சந்திக்கும் நவரச அலங்காரங்களை முற்றும் விவரித்தெழுத இடமில்லாமையால் இம்மட்டில் விடப்பட்டது. கிளேஸ்காகிதத்தில் உயர்ந்த பயிண்டு செய்தது

இதன் விலை ரூபா. 1 0 0.

கடவுள் துணை.

# காஞ்சீபுரம்

# காமாட்சியம்மன்

## ஆசிரிய விருத்தம்.

### காப்பு-பின்முடுகு வெண்பா.

மங்களஞ்சேர்கச்சிநகர் மன்னுகாமாட்சிமிசைத்
துங்கமுளநற்பதிகஞ் சொல்லவே திங்கட்
பயமருவும்பணிபணியும் பரமனருளாந்தனின்மதமுங்
கபமுகனைவங்கரனிருதாள் காப்பு.

### ஆசிரிய விருத்தம்.

சுந்தரிசவுந்தரி நிரந்தரிதுரந்தரி சோதியாய் நின்ற உமையே, சுக்கிரவாரத்திலுனை நம்பி தெரிசித்தவர் கடுன்பத்தை நீக்கிடுவாய், சிந்தைதனிலுன் பதந் தன்னையே தொழுதவர்கடுபாக்கியத்தை மாற்றிவிடுவாய், செகமெலாமுன்மாய்கை புகழ்வென்னலாமோ, சிறியனென் முகந்திடாது, சொந்தவுன்மைந்தனெந்தனை ரட்சிக்கச் சிறியகடனுன்னதம்மா, சிவசிவமகேஸ்வரி பரமனிடமீஸ்வரி சிரோன்மணிமனோன்மணியுநீ, அந்தரி துரந்தரி நிரந்தரி பரம்பரியனைரட்சிப்புநீயே, அழகான காஞ்சியில் புகழாகவாழ்ந்திடுமம்மை காமாட்சியுமையே (க)

பத்துவிரல்மோதிரம் எததனைப்பிரகாசமது பாடசுந்தண்டைகொலுசும், பச்சைவைடூரிய மிச்சையாயிழைத்திட்ட பாதச்சிலம்பி னொலியும், முத்துமூக்குத்தியும் ரத்தினப்பதக்கமும் மோகனமாலையழகும், முழுதும்வைடூரியம் புட்பராகத்தினல் முடிந்திட்ட தாலியழகும், சுத்தமாயிருக்கின்ற காதினிற் கம்மலும்செங்கையிற்பொன்கங்கணம், செகமெலாம் விலைபெற்ற முகமெலாவொளிவுற்ற சிறுகாதுகொப்பினழகும், அத்திவரதன்றங்கை சத்திசிவ ரூபத்தை யடியனாற் சொல்லதிறமோ, அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடுமம்மை காமாட்சியுமையே. (௨)

கெதியாக வுந்தனைக் கொண்டாடிநின்றென் குறைகளைச்சொல்லிநின்றும், கொடுமையா யென்மீதில் வறுமையைவைத்துநீ குழப்பமாயிருப்பதேனோ, சதிகாரியென்றுநா னறியாமலுந்தனைச் சதமாக நம்பினேனே, சற்றாகிலும்மனது வைத்தென்னைரட்சிக்க சாதகமுனக்கில்லையோ, மதிபோல வொளியுற்ற புழைநெடுங்கரமுடைய மதகஜனையீன்றதாயே, மாயனிடதங்கையே பரமனதுமங்கையே மயானத்தில் நின்றவுமையே, அதிகாரியென்றுநா னுசையாய்நம்பினே னன்புவைத் தென்னையாள்வாய், அழகானகாஞ்சியில் புகழாகவாழ்ந்திடு மம்மை காமாட்சியுமையே.

பூமியிற் பிள்ளையாய்ப் பிறந்ததும் வளர்ந்துதான் பேரான ஸ்தலமுமறியேன், பெரியோர்கடரிசன மொருநாளுநான்கண்டு போற்றிகொண்டாடியறியேன், வாமியென்றன்னை சிவகாமி யென்றேசொல்லி வாயினாற்பாடியறியேன், மாதாபிதாவினிட பாதத்தைநானுமேவணங்கியொருநாளுமறியேன், சாமியென்றேயெண்ணி சதுருடன் சைகூப்பிசரணங்கள் பண்ணியறியேன், சற்குருவின்பாதார விந்தங்களைக்கண்டு சாஷ்டாங்க தெண்டனறியேன், ஆமிந்தபூமியி லடியனைப்போல் மூடனுய்ச்சி நீகண்டதுண்டோ, அழகான காஞ்சியில் புகழாகவாழ்ந்திடு மம்மைகாமாட்சி யுமையே (ச)

பெற்றதாயென்றன்னை மெத்தவுநம்பினன் பிரியமாயிருந்தேனம்மா, பித்தலாட்டக் காரியென்று நானறியா துன்புருஷனை மறந்தனம்மா, பத்தனுயிருந்து முன் சித்தமுமிரங்காமல் பராமுகம் பார்த்திருந்தால், பாலனெனப்படி விசனமில்லாமல்ல பாங்குட னிருப்பதம்மா, இத்தனைமோசங்க ளாகாதிவாகாது யிதுதர்மமல்லவம்மா, எந்தனைரட்சிக்க சிந்தனைகளில்லையே யிதுநீதியல்லவம்மா, அத்திமுகனுசையோ யிப்புத்திரனை மறந்ததையெனக்கருள் புரிகுவாய்நீ, அழகானகாஞ்சியில் புகழாகவாழ்ந்திடு மம்மை காமாட்சியுமையே. (ரு)

மாயவன்றங்கைநீ மரகதவல்லிநீ மணிமந்திரகாரிநீயே, மாயாசொரூபிநீ மகேஸ்வரியுமானநீ மலையரைய

ன்டகளானநீ, தாயேமீனாட்சிநீ சற்குணவல்லிநீ தயாநிதி விசாலட்சிநீ தாரணியில் பெயர்பெற்ற பெரியநாயகியு ம்நீ சரவணனை யீன்றவளும்நீ, பேய்களுடனாடுநீ அத் தனிட பாகமதை பேர்பெற வளர்த்தவளும்நீ, பிரணவ சொரூபிநீ பிரசன்னவல்லிநீ பிரியவுண்ணா முலையுநீ, ஆ யிமகமாயிநீ ஆனந்தவல்லிநீ அகிலாண்டவல்லிநீயே அ ழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடுமம்மை காமாட் சியுமையே. (சூ

பொல்லாத பிள்ளையா யிருந்தாலும் பெற்றதாய் புத்திகளைச்சொல்லவில்லையோ, பேய்பிள்ளை யானாலும்நீ பெற்றபிள்ளையாய்ப் பிரியமாய் வளர்க்கவில்லையோ, கல் லாகிலும்மூச்சு நில்லாமல்வாய்விடுங் கதறினனழுதகுற வில் கடுகதனி லெட்டிலொரு கூறுவதிலாகிலுங் காதினி லுழைந்ததில்லையோ, இல்லாதவன்மங்க ளென்மீதிலேன ம்மா யினிவிடுவதில்லைசும்மா, இருவரும் மடிபிடியாய்த் தெருவினில் வீழ்வது மிதுசருமமல்லவம்மா, அல்லாரு முன்னையே சொல்லியேயேசுவா ரதுநீதியல்லவம்மா, அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடு மம்மை காமா ட்சியுமையே. (எ)

முன்னையோர் சென்மாந்திர மென்னபாவங்கள் மூ டனான்செய்தனம்மா, மெய்யென்று பொய்சொல்லிக்கை தனிற்பொருள்தட்டி யோகங்கள் பண்ணினேனோ, என் னமோ தெரியாதுவிட்சணந் தன்னிலே யிக்கட்டுவந்த

தம்மா, ஏழைநான் செய்தபிழைதாய்பொறுத தருடந்து மென்கவலை தீருமம்மா, சின்னங்களாகாது செயமில்லையோதாயே சிறுநாணமாகுதம்மா, சிந்தனைகளென்மீதில் வைத்து நற்பாக்கியவருள் சுவசத்தி காமாட்சிநீ, அன்னவாகனமேறி யானந்தமாகவுன் னடியன் முன்வந்து நிற்பாய், அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடு மம்மை காமாட்சியுமையே (அ)

எநதனைப் போலவே சென்மமெடுத்தோர்களின் பமாய் வாழ்ந்திருக்க, யான்செய்த பாவமோவித்தனை வறுமையி லுன்னடியேன் தவிப்பதம்மா, உன்னையே துணையென் றுறுதியாய் நம்பினேன் னுன்பாதஞ் சாட்சியே, உனையன்றி வேறுதுணை யினியாரையுங் காணேன் உலகதனிலெந்தனுக்கு, பின்னையொன்றெண்ணிநீ சொல்லாமலென்றுவரும் போக்கடித் தென்னைரட்சி, பூலோகமெச்சவே பாலன்மார்கண்டன்போல் பிரியமாய்க்காத்திடம்மா, உன்னையே யின்னமுன் னடியேனை ரட்சிக்க அட்டிசெய்யாதேயம்மா, அழகானகாஞ்சியில் புகழாக வாழ்ந்திடு மம்மை காமாட்சியுமையே. (கூ)

பாரதனி லுள்ளவும் பாக்கியத்தோ டென்னைபாங்குட னிரட்சியம்மா, பத்தியாயுன்பாதம் நித்தந்தெரிசித்தவர் பாலருக்கருள் புரியவும், சீர்பெற்றதேகத்தில்சிறு பிணிகள் வாராமல் செங்கலியையணுகாமலும், சேயனிடபாக்கியஞ் செல்வங்களைத்தந்து செயம்பெற்று வாழ்க்

துவரவும், பேர்பெற்ற வாழ்ந்துவரவும், பேர்பெற்றகா லனைப் பின்ருெடரவொட்டாமற் பிரியமாய்க் கார்த்திடம்மா, பிரியமாயுன்மீதில் சிறியனுன் சொன்னகவி பிழைகளைப் பொருத்தரட்சி, ஆரதனின் மணல்குவித்தரும் பூசைசெய்த வென்னம்மை யேகாம்பரியே, அழகான காஞ்சியில்புகழாகவாழ்ந்திடுமம்மை காமாட்சியுமையே

எத்தனை செனனம தெடுத்தனே தெரியாதுவிப்பூமி தன்னிலம்மா, இனியாகிலுங் கிருபைவைத்தெனை ரட்சியு மினிசெனனமெடுத்திடாமல் முத்திதரவேணுமென் றுன்னையேதொழுதுநான் முக்காலும்நம்பினேனே முன்பின்னுந்தோணும மனிதரைப்போலநீ முழித்திருக்காதேயம்மா, வெற்றிபெறதன்மீதில் பத்தியாம் நான் சொன்ன விருத்தங்கள் பதினென்றையும், விருப்பமாய் கேட்ட நீயளித்திடுஞ்செல்வத்தை விமலனுரேசப்போரூர். அத்தனிடபாகமதைவிட்டுவந்தேயென் னருங்குறையைத்தீருமம்மா, அழகானகாஞ்சியில் புகழாகவாழ்ந்திடு மம்மைகாமாட்சியுமைமே (கக)

காமாட்சியம்மன் ஆசிரிய விருத்தம்

முற்றிற்று.